
ஸ்ரீ :







ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ம பரப்ரஹ்மணே நம :
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ம திவ்ய
பாதுகாஸேவக ஸ்ரீவண்சட கோப
ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹா தேசிகாய நம :

# ஸ்ரீமாலோல கைங்கர்ய ஸபா

**"சம்பகம்" 5/3, ஸ்ரீ வீரராகவன் தெரு,**
**நங்கை நல்லூர், சென்னை - 61.**
**Ph. : 2232 3125**

விக்ஞாபனம்

ஸ்ரீ மாலோலனுடைய கடாக்ஷத்தினாலும் ஸ்ரீமத் அழகிய சிங்கருடைய திவ்யானுக்ரஹத்தினாலும், நங்கைநல்லூரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள **ஸ்ரீமாலோல கைங்கர்ய ஸபா** மிகுந்த உற்சாகத்துடன் ஆஸ்திகர்களின் பேராதரவுடன் ஸ்ரீமாலோல ஆராதனம், டோலை, பெரிய திருமஞ்சனம் முதலியவைகளை கடந்த ஒன்பது ஆண்டுகளாக செய்து வருவது யாவரும் அறிந்ததே.

ஸபாவின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக ப்ரதி வருஷம் ஜனவரி 26ம் தேதி ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஸ்ரீமாலோலனுடன் எங்கு எழுந்தருளியிருந்தாலும் தேச க்ஷேமத்திற்காகவும், மத நல்லிணக்கத்திற்காகவும் ஆராதிப்பது என முடிவு செய்து அதன்படி செய்து கொண்டு வருவதை யாவரும் அறிவர். ஆனால், இவ்வருஷம் ஜனவரி 26ந் தேதி அன்று சூர்யக்ரஹணம் ஸம்பவிப்பதால் அன்று ஆராதனம் செய்ய முடியாத நிலை.

ஸ்ரீமத் அழகிய சிங்கரின் நியமனத்தின் பேரில், ஸ்ரீமத் அழகிய சிங்கரையும், ஸ்ரீமாலோலனையும் நங்கைநல்லூருக்கே எழுந்தருளச் செய்து ஆராதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

2009 மார்ச் 17ம் தேதி, செவ்வாய்க்கிழமை மாலை முதல் 18, 19 மற்றும் 20ம் தேதி காலை வரை, நங்கைநல்லூர் 18வது தெருவில் உள்ள, **ஜெயின் ரங்கநாயகி கம்யூனிட்டி ஹாலில்** (போன் : 22247933) ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸ்ரீமாலோலனுடன் எழுந்தருளியிருந்து ஆராதிக்க திருவுள்ளம் பற்றியிருக்கிறார்.

ஆகவே ஆஸ்திகர்கள் அனைவரும் இவ் வைபவத்தில், யதாசக்தி அந்வயித்து திரளாக கலந்துகொண்டு ஸ்ரீமாலோலன், ஸ்ரீ கண்ணனையும், ஸ்ரீமத் அழகிய சிங்கரையும் ஸேவித்து பலமந்த்ராக்ஷதைகள் பெற்று க்ருதார்த்தர்களாகுமாறு ப்ராரர்த்திக்கிறோம்.

தொடர்பு கொள்ள :
**K.S. துரைராஜன்**
4/10, 8வது தெரு,
ராம் நகர், நங்கைநல்லூர்
சென்னை – 600 061.
**Ph. : 2267 1240**
**Cell : 9444070686**

செயலாளர்
**ஸ்ரீமாலோல கைங்கர்ய ஸபா**
நங்கைநல்லூர்

குகன் பிரிண்டர்ஸ், நங்கைநல்லூர், சென்னை – 61. செல் : 9840473436